## இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் - 2015

இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானங்கள் மற்றும் செலவுகள் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2017 மார்ச் 08 திகதி கூட்டுத்தாபன தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக் கூற்றில், விரிவான வருமானங்கள் மற்றும் செலவுகள் கூற்றில் மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாக காணப்படுகின்றதா என்பதனை நிச்சயிக்க முடியாதுள்ளளேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 02**

(i) மீளாய்வாண்டிற்கான நடைமுறை அல்லாத சொத்துக்கள் விற்பனை மீதான இலாபமாகிய ரூபா 243,945 தொகை காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது கவனம் செலுத்தாமையினால் காசுப் பாய்ச்சல் கூற்றில் ஒத்த சமநிலைத் தன்மை கணக்காய்வில் சிக்கலானதாக காணப்பட்டது.

(ii) மீளாய்வாண்டின் போது உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருந்த இடர் கடனுக்கான வட்டிப் பெறுவனவுகள் ரூபா 992,010 தொகை முதலீட்டு நடவடிக்கைகளின் மூலம் உருவாகி காசுப் பாய்ச்சல்களின் கீழ் காட்டப்படுவதற்கு பதிலாக செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் காசுப் பாய்ச்சல்களின் கீழ் காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(iii) அரச மூலதன மானியப் பெறுவனவுகள் ரூபா 110,000,000 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதி நடவடிக்கைகளின் கீழ் காட்டப்படவேண்டுமெனினும் அவை முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

(i) ஏதேனும் சொத்தொன்றினை பயன்படுத்துவதற்கு தயாரான நிலைக்கு கொண்டு வந்திருந்த நாள் முதல் சொத்தினை பெறுமானத் தேய்வு செய்யக் கூடிய பெறுமதியானது அதனது பயன்தரு காலம் முழுவதும் முறைசார் அடிப்படையின் மீது பங்கீடு செய்யப்பட வேண்டும். எனினும், கூட்டுத்தாபனத்தினால் சொத்துக்கள் கொள்வனவு செய்த ஆண்டிற்காக முழுமையாக பெறுமானத் தேய்வு கணித்தல் மற்றும் விற்பனை செய்த ஆண்டில் பெறுமானத் தேய்வு கணிக்காமல்விடல் என்ற கொள்கையினைக் கடைபிடிக்கப்பட்டிருந்தது.

(ii) சொத்தொன்றினது நியாயமான பெறுமதியில் பொருண்மயற்ற வித்தியாசங்கள் காணப்படாத போது சொத்துக்கள் 3 வருடங்களுக்கு அல்லது 5 வருடங்களுக்கு ஒரு முறை மீள்மதிப்பீடு செய்தல் போதுமானதாக இருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் 2007 இன் பின்னர் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தினால் அரச மானியங்களை கணக்கீடு செய்தல் தொடர்பாக கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஐயக் கடனுக்காக ரூபா 10,171,194 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், ஏற்பாட்டிற்கான அடிப்படை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கணனிகளின் ஆயுட்காலம் தொடர்பாக கவனம் செலுத்தாமல் அவை அலுவலக உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. அதனால் அலுவலக உபகரணங்களுக்கான 10 சதவீத பெறுமானத் தேய்வு ஏற்பாடுகளே கணனிகளுக்கும் பிரயோகிக்கப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான குளிர் அறைகள், ஐஸ் இயந்திரங்கள், காணிகள், வழுக்கும் வழிகள் போன்ற சொத்துக்களை குத்தகைக்குக் கொடுத்ததன் மூலம் ரூபா 57,028,377 தொகை வாடகை வருமானமொன்றினை உழைத்திருந்த போதிலும், முதலீட்டு சொத்துக்களின் கிரயம் அல்லது நியாயமான பெறுமதியினை கணக்கீடு செய்வதற்காக கொள்கையொன்றினை இனங்காணாமல், அந்த முதலீட்டுச் சொத்துக்கள் ஆதனங்களை பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

முன்னைய ஆண்டின் போது சேவையை விட்டு நீங்கிய ஊழியர் ஒருவருக்குச் செலுத்தியிருந்த பணிக்கொடையினை ஏற்க மறுத்ததன் காரணமாக திருப்பி அனுப்பப்பட்டிருந்த ரூபா 421,458 தொகைக்கான காசோலைகள் பணிக்கொடை ஒதுக்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. மேலும் வருட இறுதியில் அவ் ஊழியர்களுக்காக பணிக்கொடை ஒதுக்கியிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை அதே தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை ஒதுக்கக் கணக்கு மற்றும் பணிக்கொடை கொடுப்பனவு கணக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்கள் மற்றும் பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் முறையே ரூபா 83,040 மற்றும் ரூபா 338,418 வித்தியாசங்கள் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டுக்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 07 கணக்குகள் தொடர்பாக வங்கி மீதி மற்றும் திருத்திய காசேட்டு புத்தக மீதிகளிடையே ரூபா 13,367,774 தொகையான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| இயந்திரங்கள் | 255,966,576 | விரிவான பட்டோலைகள் |
| உபகரணங்கள் | 99,705,372 | |
| பொம்ப் ப்ரீச்ட் பெறுவனவு | 2,215,769 | |
| பிற்போடப்பட்ட பொறுப்புக்கள் | 1,653,400 | |
| பதிவழிக்கப்பட வேண்டிய மீதிகள் | 81,769,596 | |
| பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | 33,933,412 | |
| ஏனைய கடன்பட்டோர் | 1,745,385 | காலப் பகுப்பாய்வு |
| கடன்பட்டோர் | 9,851,476 | |
| பெற வேண்டிய தடுத்து வைத்தல் வரி | 914,980 | காலப் பகுப்பாய்வுகள் மற்றும் விரிவான பட்டோலைகள் |
| தடுத்து வைத்தல் வரி | 1,611,054 | |
| வருவாய்ச் செலவுகள் | 2,459,127 | |

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு கொள்வனவு செய்வதற்காக செலுத்தியிருந்த முற்பணங்கள் ரூபா 36,867,510 தொகையில் 10 வருடங்களை விட அதிகமான, 05 வருடங்களை விட அதிகமான, 01 வருடம் முதல் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட மீதிகள் முறையே ரூபா 24,492,699 தொகை, ரூபா 5,860,711 தொகை மற்றும் ரூபா 6,514,100 தொகையினை தீர்ப்பதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 313,325,719 தொகையான கடன்பட்டோர் பெறுமதியில் 05 வருடங்களை விட அதிகமான, 03 வருடங்களை விட அதிகமான மற்றும் 01 வருடம் முதல் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட மீதிகள் முறையே ரூபா 124,167,764, ரூபா 35,385,439 தொகை மற்றும் ரூபா 125,247,632 தொகை இருந்தது.

(இ) 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படும் ரூபா 81,769,596 தொகையான இனங்காணப்படாத கணக்கு மீதியொன்று மற்றும் கூட்டுப்பெறுமதி ரூபா 111,954,599 தொகையான முற்பணங்கள், கடன்கொடுத்தோர் மற்றும் வைப்புகள் என்பவற்றை மீளாய்வாண்டின் போதும் தீர்த்திருக்கவில்லை.

(ஈ) 04 வருட காலம் முதல் காணப்படும் பொருளாதார சேவை வரி ரூபா 10,512,971 தொகையினை மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ஏனைய வைப்புக்கள் ரூபா 4,509,025 தொகை 05 வருடங்களை விட அதிகமான காலம் முதல் தீர்க்கப்படாமல் காணப்பட்டது.

(ஊ) 2013 ஆண்டு முதல் ஊழியர் இடர் கடனில் காணப்படும் ரூபா 808,019 தொகைக்கான கடன் மீதி ஒன்றினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 104 | 2015 அக்தோபர் 28 திகதி இடம்பெற்ற விபத்தின் மூலம் கூட்டுத்தாபனத்தின் பஸ் வண்டிக்கு ஏற்பட்டிருந்த நட்டத்தின் அளவு அதற்குரிய காரணங்கள் மற்றும் பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினை முடிவு செய்வதற்காக ஆரம்ப விசாரணை ஒன்று நடத்தியிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 137(5) | பொருட்கள் கிடைக்கப்பெற்றது என்பதை உறுதிப்படுத்தாமல் மீளாய்வாண்டின் போது 600 டீ சேட்களுக்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 470,470 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) நிதிப் பிரமாணம் 757(2) | மீளாய்வாண்டிற்கான மதிப்பாய்வுச் சபையின் அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) திறைசேரி சுற்றறிக்கைகள் | |
| (i) 1978 இன் திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | கூட்டுப்பெறுமதி ரூபா 4,929,662,403 தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக பதிவேடொன்று நாளதுவரையாகப் பேணப்பட்டு பராமரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | ரூபா 99,705,372 தொகை பெறுமதியான கணனிகள் மற்றும் துணைக் கருவிகள் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

(இ) பொது நிருவாக சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2011 திசெம்பர் 12 ஆந் திகதிய 28/2011 ஆம் இலக்க சுற்றறிக்கை | இலங்கை பொறியியல் சேவையை சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு உரித்தான ரூபா 15,000 படிக்கு உரித்தில்லாத இலங்கை பொறியியல் சேவையில் உள்ளடங்காத கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த 07 பொறியியலாளரகளுக்கு பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் மீளாய்வாண்டின் போது படியாக ரூபா 1,076,129 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

(ஈ) பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள்

| | | |
|---|---|---|
| (i) | 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 VII ஆம் பிரிவு | பதில் கடமைப் படி செலுத்தக் கூடிய ஆகக் கூடிய காலம் மூன்று மாதங்களாக இருந்த போதிலும் அந்த வரையறைகளுக்கு முரணாக கூட்டுத்தாபனத்தினால் 06 உத்தியோகத்தர்களுக்கு பதில் கடமைச் சம்பளமாக மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 214,848 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ 1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் போக்குவரத்துப் படி பெறுவதற்கு உரிமை இல்லாத உத்தியோகத்தர்கள் 22 பேருக்கு ரூபா 5,000 வீதம் கூட்டுப்பெறுமதி ரூபா 110,000 தொகையும் மற்றும் உத்தியோகத்தர்கள் 13 பேருக்கு ரூபா 1,500 வீதம் கூட்டுத்தொகை ரூபா 19,500 தொகையும் போக்குவரத்துப் படியாக மீளாய்வாண்டின் செப்தம்பர் மாதத்திற்காகச் செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (உ) | 2015 ஜுன் 29 ஆந் திகதிய PE/2015/04 ஆம் இலக்க தேர்தல் ஆணையாளரின் சுற்றறிக்கை | பாராளுமன்ற தேர்தல் காலப் பகுதியில் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை சேர்த்துக்கொள்ளல், பதவி உயர்வு வழங்குதல் மற்றும் இடமாற்றங்கள் செய்தல் மேற்கொள்ளக் கூடாதிருந்த போதிலும் அதற்கு முரணாக 2015 பொதுத்தேர்தல் காலப் பகுதியில் கூட்டுத்தாபனத்தினால் 20 எழுதுனர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் ரூபா 128,779,340 ஆன பற்றாக்குறையொன்றாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 136,861,294 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 8,081,954 தொகையாகிய முன்னேற்றம் ஒன்று காணப்பட்டது. செயற்பாட்டு வருமானம் ரூபா 41,970,918 இனால் குறைந்திருந்த போதும் நிருவாகச் செலவுகள் மற்றும் பதவியணி கிரயம் முறையே ரூபா 54,931,047 தொகையினால் மற்றும் ரூபா 15,466,149 தொகையினால் அதிகரித்திருந்த போதிலும் திறைசேரியில் இருந்து கிடைத்திருந்த நடைமுறை மானியம் ரூபா 120,950,000 தொகையினால் அதிகரித்தல் மேற்கூறிய முன்னேற்றத்திற்கு முக்கியமாக காரணமாகியிருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 4 வருடங்களின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2011 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை தொடர்ச்சியாக நிதிப் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு மற்றும் ஊழியர் ஊதியத்தினை கவனத்தில் எடுத்த போது 2011 ஆண்டின் போது ரூபா 242,400,504 தொகையான கூட்டுத்தாபன பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 657,616,399 தொகையாகக் காணப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

---------------------------------------------------------

கடந்த 05 வருடங்களில் கூட்டுத்தாபனத்தின் மொத்த வருமானத்தில் அரச மானியங்களின் பங்களிப்பு 46.70 சதவீதம் முதல் 99.80 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன், சுயமாக உருவாக்கப்பட்ட வருமானத்தின் பங்களிப்பு 53.29 சதவீதத்திலிருந்து 0.14 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

### 4.1 செயலாற்றல்

----------------------

1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில்கள் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு மற்றும் 1997 மார்ச் 06 திகதிய இலக்க சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானியின் பிரகாரம் இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் திருத்திய பிரதான குறிக்கோள்கள் பின்வருமாறு.

- மீன்பிடி துறைமுகங்கள், நங்கூர தளங்கள், கடல் கட்டமைப்புக்கள் மற்றும் ஏனைய கடலோர வசதிகளைத் திட்டமிடல், திட்டங்களை வடிவமைத்தல், நிர்மாண வேலை வசதிகளை ஏற்படுத்தல், அமுல் நடத்துதல், கட்டுப்படுத்தல், பராமரித்தல், முகாமைத்துவப்படுத்தல் மற்றும் அவற்றின் மூலம் மீன்பிடி தொழில் செய்வோருக்கு மற்றும் ஏனைய நபர்களுக்கு வழங்கப்படும் வசதிகளுக்காக பொதுவான துறைமுகக் கட்டணங்களை தீர்மானித்தல் மற்றும் அறவீடு செய்தல்.

- மீன்பிடி படகுகளைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு வசதிகளை வழங்குதல்.

- குளிரறைகள், ஐஸ் இயந்திரங்கள், ஏனைய குளிரறை வசதிகளை நிறுவுதல் செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல்.

- நீர், எரிபொருள், உராய்வு எண்ணெய்கள், மின்சாரம், ஐஸ் மற்றும் குளிர் அறை வசதிகள் வழங்குதல் மற்றும் மீன்பிடித் தொழிலுக்காக மற்றும் மீனவ தொழிலில் ஈடுபடுவோருக்கு தொடர்புடைய ஏனைய சேவைகள் வழங்கள்.

- மீன்பிடித் துறைமுகங்கள், நங்கூரத் தளங்களுக்கு பாதுகாப்பு சேவை ஏற்பாடுகளினை வழங்குதல்

- கடல் கட்டமைப்புக்கள், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இருக்கும் ஏனைய நிறுவனங்களுக்கு சேவை ஏற்பாடுகள் மேற்கொள்ளல் மற்றும் அதற்கான கட்டணங்கள், வாடகை மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அறவீடு செய்தல்.

- இலங்கையின் அடையாளம் காணப்பட்ட பொருளாதார வலயம் தொடர்பாக செயற்பாடுகள், கட்டுப்பாடுகள் மற்றும் கண்காணிப்புக்களை முன்னெடுத்தல்.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீன்பிடி படகுகளுக்காக பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு வசதிகள் வழங்குதல் என்பன கூட்டுத்தாபனம் அமைத்ததன் முக்கியமான குறிக்கோன்களில் ஒன்றாக இருந்த போதிலும், மேற் குறிப்பிட்ட குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் நிறைவேற்றலின் முன்னேற்றம் பற்றி பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டிய தலைமை அலுவலகத்தின் கட்டிடங்களின் வர்ணம் தீட்டும் வேலை, அலுவலகத்தின் உள்ளக பிரித்தொதுக்குதல் மற்றும் தற்போது காணப்படும் உட்கட்டமைப்பு முறைமையை புனர்நிர்மாணம் செய்தல் ஆகியவற்றிற்காக ரூபா 10 மில்லியன் நிதியேற்பாடு செய்திருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றல் முறையே 4 சதவீதம் மற்றும் 10 சதவீதம் ஆக காணப்பட்டது.

(ii) கடல் சார் கட்டமைப்பு மற்றும் துறைமுகங்களில் மேடைகளின் பராமரிப்பு வேலைகளுக்காக ரூபா 14 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் முறையே 21 சதவீதம் மற்றும் 25 சதவீதம் ஆகக் காணப்பட்டது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெறுகைகள் செயற்பாடுகள் முடிவடைந்திருக்கவில்லை.

(iii) நீர் அளவை கணிப்பீட்டு (Hydrographic Survey) விடயங்களுக்காக ரூபா 500,000 தொகை நிதி ஏற்பாடு மேற்கொண்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் முறையே 1 சதவீதம் மற்றும் 15 சதவீதமாகும். மேலும், மீளாய்வாண்டின் போது நீர் அளவை கணிப்பீட்டு விடயங்கள் போதியளவினதாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டுத்தாபனத்தின் கீழ் செயற்பட்ட 21 மீன்பிடித் துறைமுகங்களில் 17 துறைமுகங்களும் மீளாய்வாண்டின் போது ரூபா 156,235,669 தொகை செயற்பாட்டு நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. அவற்றில் 13 முன்னைய ஆண்டிலும் நட்டமடைந்திருந்தன. காலி, திக்ஓவிட மற்றும் பேருவல ஆகிய மீன்பிடித் துறைமுகங்கள் மூன்றிலும் செயற்பாட்டு இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டில் முறையே 95 சதவீதத்தினாலும் 27 சதவீதத்தினாலும் மற்றும் 76 சதவீதத்தினாலும் குறைந்திருந்தது. முன்னைய ஆண்டின் போது இலாபம் பெற்றிருந்த மிரிஸ்ஸ, மோதர மற்றும் கடுவெல்ல ஆகிய துறைமுகங்கள் மீளாய்வாண்டின் போது நட்டமடைந்திருந்ததுடன் இலாபத்தின் வீழ்ச்சி முறையே 154 சதவீதம் 136 சதவீதம் மற்றும் 299 சதவீதம் ஆக இருந்தது. நட்டமடையும் துறைமுகங்களின் நட்டமடைவதற்கான காரணங்களை ஆராய்ந்து இலாபம் பெறும் நிலைமைக்கு கொண்டு வரல் அல்லது நட்டத்தை குறைத்துக் கொள்ளல் மற்றும் இலாபம் குறைந்து செல்லும் துறைமுகங்களில் அதனை அதிகரிப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை இனங்கண்டு அதற்காக உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்காக முகாமை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஈ) கூட்டுத்தாபனம் சமர்ப்பித்திருந்த கூட்டிணைப்புத் திட்டத்தின் பிரகாரம் 2011 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை இலாபம் பெறுவதற்கு எதிர்ப்பார்த்திருந்த போதிலும் அக்காலப் பகுதியில் நட்டமடைந்திருந்தது. இந் நிலைமையின் கீழ் 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கங் கொண்ட அரச முயற்சிகள் சுற்று நிருபத்தின் 5.1.1 ஆம் பிரிவின் பிரகாரம் எதிர்ப்பார்த்த இலக்கினை பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவதற்காக தாமதமின்றி ஆக்கபூர்வமான செயல்முறைகளை எடுப்பதற்கு பணிப்பாளர் சபை மற்றும் உயர்மட்ட முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான சயுரி படகு வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக மீளாய்வாண்டு பெப்ரவரி 23 திகதி தனியார் கம்பனி ஒன்றுடன் மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் வாடகை எடுத்திருந்த கம்பனியினால் படகினை தனது பொறுப்பில் வைத்திருக்கும் ஒரு நாளைக்கு ரூபா 200,000 தொகை வீதம் மீளாய்வாண்டின் போது 28 நாட்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 5,200,000 தொகை வாடகைக்குப் பெற்றிருந்த கம்பனியிடம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அவற்றில் ரூபா 1,600,000 தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு முரணாக எரிபொருள், நீர், ஊழியர் சம்பளம், மேலதிக நேர வேலை மற்றும் படியாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,409,960 தொகையும் உட்பட கூட்டுத்தொகை ரூபா 5,009,960 தொகை தனியார் கம்பனியில் இருந்து அறவீடு செய்வதற்காக 2016 அக்தோபர் மாதம் வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 16 மீன்பிடித் துறைமுகங்களில் காணப்பட்ட பௌதீக எரிபொருள் இருப்பு மற்றும் புத்தகப் பெறுமதியிடையே ரூபா 4,063,630 தொகைக்கான குறைவு ஒன்று காணப்பட்ட போதிலும் முகாமையினால் இவ் வித்தியாசத்தை இனங்கண்டு குறிப்பிட்ட சாராரிடம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) திக்ஓவிட மீன்பிடித் துறைமுகத்தின் ஐஸ் இயந்திர அறைகள் வாடகை அடிப்படையில் பெற்றிருந்த தனிப்பட்ட சாராரிடமிருந்து 2013 அக்தோபர் முதல் 2014 பெப்ரவரி வரை காலப் பகுதி தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த வாடகை ரூபா 1,848,280 தொகையான வாடகை 2016 அக்தோபர் மாதம் வரை அறவீடு செய்வதற்காகு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2014 மற்றும் 2015 ஆகிய 02 வருடங்களில் பூர்த்தி செய்வதற்காக திட்டமிட்டிருந்த மிரிஸ்ஸ மீன்பிடித் துறைமுகம் பசுமை மீன்பிடித் துறைமுகம் ஒன்றாக அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 30 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனத்திற்கு சாட்டப்பட்டிருந்த மீன் ஏல விற்பனை மண்டபத்தின் நிர்மாண வேலைகளுக்காக ரூபா 1.36 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை பசுமை மீன்பிடித் துறைமுகம் ஒன்றாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அபிவிருத்தி செய்திருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்திற்கு குத்தகை அடிப்படையில் புதிதாக வாகனங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 8 மில்லியன் நிதியேற்பாடு செய்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் பழைய வாகனங்களை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 9 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) 2007 ஆண்டின் போது வழங்கள் பகுதியில் கடமையாற்றிய பெண் எழுதுனர் ஒருவர் அரசாங்க பணத்தை முறைகேடாகப் பயன்படுத்தினார் என உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டியிருந்த போதிலும் அதற்காக முறையான ஒழுக்கக் கட்டுப்பாட்டு விசாரணை ஒன்று மேற்கொள்ளாமல் அவளுக்கு இடமாற்றம் வழங்கியிருந்த போதிலும் 2014 ஆண்டின் போது மீண்டும் வழங்கள் பகுதியின் விடயங்களுக்கு இணைக்கப்பட்டிருந்தார்.

(எ) 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.10 ஆம் பந்திக்கு முரணாக கூட்டுத்தாபனத்திற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 25 மில்லியன் வரையறையை மிகைத்து ரூபா 39 மில்லியன் தொகையான வங்கி மேலதிகப் பற்று பெறப்பட்டிருந்தது.

(ஏ) செலுத்த வேண்டிய தினத்தில் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி அனுப்பப்படாத காரணத்தினால் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் அந் நிதியங்களுக்கு முறையே ரூபா 6,432,561 மற்றும் ரூபா 41,177 என்பன மிகைக் கட்டணமாக செலுத்தப்பட்டது.

(ஐ) மீளாய்வாண்டின் போது குத்தகைக்கான தவணைப் பணம் செலுத்துவதில் காணப்பட்ட தாமதம் காரணமாக ரூபா 1,454,809 தொகையான தண்டப் பண வட்டி செலுத்த நேரிட்டது.

## 4.3 தொழிற்படு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆசிய அபிவிருத்தி வங்கியின் மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் கடன் உதவியின் கீழ் ரூபா 224 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டு கூட்டுத்தாபனத்துக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த சிலாபம் மீன்பிடித் துறைமுகத்தின் செயற்பாட்டு விடயங்கள் 2009 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 அக்தோபர் மாதம் வரை மீன்பிடித் துறைமுகம் ஒன்றில் இருந்து நிறைவேற்றப்பட வேண்டிய அடிப்படை குறிக்கோளாகிய மீனவர்களுக்கு உதவி வழங்கள் இடம்பெற்றிருக்கவில்லை. 2011 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை துறைமுகத்தின் செயற்பாடுகளின் மூலம் ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 38,800,732 தொகையாக காணப்பட்டது. கடன் உதவியின் மீது நிர்மானிக்கப்பட்டிருந்த இந்த துறைமுகம் தொடர்பாக செலுத்த வேண்டிய வெளிநாட்டு கடன் மற்றும் அதற்கான வட்டியை செலுத்துதல் அரசாங்கத்தின் மீது விதிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கடந்த 5 வருடங்களில் மொத்த செயற்பாட்டு இலாபத்தில் இருந்து 73 சதவீதம் உழைத்திருந்த மோதர மீன்பிடித் துறைமுகம் 2014 அக்தோபர் 30 திகதி முதல் 25 வருடங்களுக்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு குத்தகையின் அடிப்படையில் அரசாங்க பெறுமதி மதிப்பீட்டுத் தொகையாகிய ரூபா 1,700,000 தொகை மீது கவனம் செலுத்தாமல் மாதாந்தம் ரூபா 125,000 தொகை வீதம் 1.421 ஹெக்டயர் காணி மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடங்கள் குத்தகைக்கு கொடுத்ததனால் மீளாய்வாண்டின் போது ரூபா 2,529,915 தொகை நட்டம் ஏற்பட்டிருந்தது.

(இ) கிரிந்த துறைமுகத்தில் இருந்து மணல் அகற்றுவதற்காக மீளாய்வாண்டு ஜூன் மாதத்தின் போது கூட்டுத்தாபனத்துடன் உடன்படிக்கை மேற்கொண்டிருந்த தனியார் நிறுவனம் இவ் உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 200,000 தொகை பணம் வைப்புச் செய்யப்பட்டிருக்காததுடன் கிரிந்த துறைமுகத்தின் மணல் அகற்றுதல் முறைப் பிரகாரம் மேற்கொள்ளப்படாததுடன் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் மணல் அகற்றும் விடயங்களும் மீளாய்வாண்டின் போது ஆகஸ்ட் மாதத்தில் முதல் அதே நிறுவனத்திற்கு சாட்டப்பட்டிருந்த போதிலும், அங்கும் மணல் அகற்றும் விடயங்கள் கைவிடப்பட்டிருந்தது.

## 4.4 முறைப் பிரகாரம் உரித்தாக்கப்படாத காணிகள்

கூட்டுத்தாபனத்தின் கீழ் செயற்படும் 21 மீன்பிடித் துறைமுகங்களில் 15 துறைமுகங்களின் கட்டிட நிர்மாண வேலைகள் இடம்பெற்றதுடன் காணிகள் உரித்தாக்காமல் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு செயற்பாட்டு விடயங்களும் நடத்தப்பட்டிருந்தன.

## 4.5 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

கூட்டுத்தாபன பதவியணியினரில் 45 பேர்கள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களின் கடமைக்கு வருதல் பற்றிய அறிக்கைகளையும் பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 8,870,163 தொகை சம்பளம் மற்றும் வேதனங்களாக செலுத்தியிருந்தது.

## 4.6 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வேறு அரச நிறுவனம் ஒன்றினால் முறையான ஒழுக்காற்று விசாரணை மூலம் சேவையை விட்டு நீக்கிய உத்தியோகத்தர் ஒருவர் 2012 ஜனவரி 04 ஆம் திகதி மனித வள முகாமைத்துவப் பதவிக்காக சேர்க்கப்பட்டிருந்தார்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு முரணாக உயர்ந்த சம்பள அடிப்படையில் வைத்ததன் காரணமாக இரண்டு உத்தியோகத்தர்களுக்கு 2012 ஜனவரி முதல் மீளாய்வாண்டு இறுதி வரையும் ரூபா 1,091,800 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2010 ஆகஸ்ட் 02 திகதி ஒப்பந்த அடிப்படையில் செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவியொன்றிற்காக ஒரு வருட காலத்திற்காக சேர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளுக்கு முரணாக ஒரு மாதத்தில் பிரதி முகாமையாளர் பதவி ஒன்றிற்கு நியமிக்கப்பட்டு ஒப்பந்த காலத்தில் செயற்திறமை மற்றும் தகைமைகள் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்படாமல் 2012 ஜனவரி 06 திகதி ரூபா 21,255 இற்கான சம்பள மட்டத்தில் வைத்து சேவையை நிரந்தரப்படுத்தியிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இருந்து அழிக்கப்பட்ட மின்சார வேலை பிரதானி பதவி ஒன்றில் பதில் கடமையாற்றுவதற்காக 2013 நவம்பர் 15 திகதி முதல் மீளாய்வாண்டு செப்தம்பர் வரை மாதாந்தம் ரூபா 3,652 தொகை வீதம் ரூபா 83,996 தொகை பதில் கடமைப் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) சட்டப் பகுதியில் இரண்டு ஊழியர்களுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது விஷேட படி என மீளாய்வாண்டின் போது ரூபா 109,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) வருடாந்தம் ரூபா 3,005,880 தொகை சம்பளம் பெறும் இரு சட்டவறிஞர் உத்தியோகத்தர்கள் உட்பட 07 பேர்கள் சட்டப் பிரிவில் கடமையாற்றும் போது வெளி சாராரிடம் சட்ட ஆலோசனைகள் பெறுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,108,722 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(எ) அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவிகளுக்கு புரம்பாக மற்றும் உரிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு மாற்றமாக 128 நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஏ) கூட்டுத்தாபனத்தில் 5 பிரதான பதவிகள் 2011 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை ஏனைய 08 பதவிகள் 2013 ஆண்டு முதல் வெற்றிடமாகக் காணப்பட்டமையால் நிறுவனத்தின் செயலாற்றிலின் மீது பாதகமான முறையில் தாக்கமழித்திருந்தது.

(ஐ) முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியின் பிரகாரம் இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கு சட்ட உத்தியோகத்தர் மற்றும் பணிப்பாளர் சபை செயலாளர் ஆகிய பதவிகள் இரண்டும் ஒன்று என அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் பணிப்பாளர் சபை செயலாளர் பதவிக்கு 2011 திசெம்பர் 02 திகதி பதில் கடமை நியமனம் ஒன்று பெற்றிருந்த கூட்டுத்தாபனத்தின் பெண் சட்ட அலுவலர் 2012 ஜனவரி முதல் 2015 திசெம்பர் மாதம் வரை கூட்டுத்தொகை ரூபா 420,000 படியாகப் பெற்றிருந்தார்.

## 4.7 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு உத்தியோகத்தர்கள் மற்றும் நான்கு எழுதுவினைஞர்களைக் கொண்ட உள்ளகக் கணக்காய்வு பிரிவுவொன்றை கொண்டிருந்த போதிலும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 2013 ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்டமையால் கூட்டுத்தாபனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிக்கவில்லை.

(ஆ) நிதிப் பிரமாணம் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வின் சுதந்திர தன்மையை பாதுகாக்க உள்ளகக் கணக்காய்வு பிரிவு நேரடியாக திணைக்களத் தலைவருக்கு அறிக்கையிட வேண்டுமெனினும் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் பொது முகாமையாளர் மூலமாக பணிப்பாளர் சபைக்கும் அதன் ஊடாக கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கும் அறிக்கை இடுவதாக அவதானிக்கப்பட்டது.

(இ) 2009 செப்தம்பர் 01 திகதிய டீஎம்ஏ/2009(2) ஆம் இலக்க முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் ஊடாக சொத்துக்கள் பதியப்படல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு நடைமுறைகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதேபோல் இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் தொடர்பாக முறையான அறிக்கையொன்று 2016 அக்தோபர் மாதம் வரையும் தயாரித்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 ஜூன் 03 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட நிதியாண்டு முடிவடைந்த 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், 2015 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 செப்தம்பர் 07 திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 வருடாந்த அறிக்கை சபைக்குச் சமர்ப்பித்தல்**

2011, 2012 மற்றும் 2013 ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் 2016 அக்தோபர் மாதம் வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வு பந்திகள்**

(அ) (i) கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு 2013, 2014 மற்றும் 2015 கணக்கு ஆண்டுகளுக்கான கொடுக்கல் வாங்கல்களில் கணக்கிடக் கூடிய பெறுமதி ரூபா 116,134,759 தொகைக்கான 20 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2016 பெப்பரவரி 16 திகதி வரை பதில் அனுப்பியிருக்கவில்லை.

(ii) கூட்டுத்தாபனத்தினால் 1996 மே 08 திகதி தற்காலிக அடிப்படையில் அலுவலக உதவியாளர் பதவிக்கு நியமனம் பெற்றிருந்த ஊழியர் ஒருவர் குறிப்பிட்டுள்ளவாறு கடமைகள் மேற்கொள்ளாமை காரணமாக 06 சந்தர்ப்பங்களில் எழுத்துமூலம் எச்சரிக்கைகளை பெற்றிருந்த போதிலும் மற்றும் தேவையான தகைமைகள் காணப்படாத போதிலும் 1 ஆம் தர எழுதுனர் பதவிக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 பெப்ரவரி 18 திகதி நடைபெற்ற பொது முயற்சிக் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த பின்வரும் கட்டளைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) வருடாந்த நிதிக்கூற்றுக்கள் விரைவாகக் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அந்த ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) நட்டத்தில் இயங்கும் துறைமுகங்களை இலாபம் ஈட்டும் நிலைக்கு மாற்றுவதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டு அதற்கான தீர்வுகள் காண்பதற்கு ஆலோசனை வழங்கியிருந்த போதிலும், அவ் ஆலோசனைகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. அத்துடன் நட்ட நிலைமைகள் மேலும் அதிகரித்துச் சென்றிருந்தது.

(iii) காணிகள், கட்டிடங்கள் வாடகைக்கு கொடுக்கும் போது அரசாங்க பெறுமதி மதிப்பீட்டாளர் ஒருவரிடம் பெறுமதி மதிப்பீடு அறிக்கை பெற வேண்டும் என சுட்டிக்காட்டியிருந்த போதிலும் அந்த ஆலோசனைகளுக்கு மாற்றமாக மோதர மற்றும் பானந்துறை துறைமுகங்களில் காணிகள் மற்றும் கட்டிடங்கள் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

(iv) ரூபா 5,065,075 தொகை பெறுமதியான 6 எரிபொருள் தாங்கிகள் வழங்குவதற்கு 2007 ஆண்டின் போது ரூபா 2,791,215 தொகை முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட எரிபொருள் தாங்கி கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருக்காமை தொடர்பாக அதற்கு பொறுப்பான வழங்கள் முகாமையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக ஆலோசனை வழங்கியிருந்த போதிலும் அவ் ஆலோசனையின் பிரகாரம் ஒழுக்காற்று விசாரணை ஒன்று இன்றி மற்றும் செலுத்திய பணத்தை திருப்பி அறவீடு செய்யப்படாமல் அவ் வழங்கள் முகாமையாளர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார்.

(v) கூட்டுத்தாபனத்தில் இருந்து வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த 31 ஊழியர்களுக்காக திறைசேரியின் அங்கீகாரத்தை பெறுவதற்கு மற்றும் ஒப்பந்த காலம் முடிவடைந்த பின்னர் சேவையை இடைநிறுத்துமாறு ஆலோசனை வழங்கியிருந்த போதிலும், அதற்கு முரணாக 45 உத்தியோகத்தர்கள் வெளி நிறுவனங்களில் மீளாய்வாண்டு இறுதி அளவில் சேவையில் ஈடுபடுத்தியிருந்தனர்.

(vi) கடன் அடிப்படையில் வழங்கியிருந்த எரிபொருள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய பணம் வெளிசாரார் மற்றும் உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு இயலாமையால் கடன் அடிப்படையில் எரிபொருள் வழங்கக் கூடாது என ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டளவில் ரூபா 70 மில்லியன் தொகைக்கான எரிபொருள் கடன் அடிப்படையில் நிறுவனத்திற்கு வழங்கியிருந்தது.

(vii) மோதர மீன்பிடித் துறைமுகத்தில் நங்கூரம் இடும் படகுகளில் இருந்து கிடைக்க வேண்டிய நக்கூரக் கட்டணம் ரூபா 5,675,373 தொகையினை அறவீடு செய்வதற்காக ஆலோசனை வழங்கியிருந்த போதிலும் 2016 அக்தோபர் மாதம் வரை அறவீடு செய்திருக்கவில்லை.

(viii) ஊழியர் சேமலாபம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்புத் தொகைகள் குறிப்பிட்ட தினங்களில் செலுத்துதவற்கு ஆலோசனை வழங்கியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் அவ் ஆலோசனைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ix) புதிய உத்தியோகத்தர்கள் சேர்க்கும் போதும் மற்றும் முகாமைத்துவச் சேவை திணைக்களத்தின் சுற்றறிக்கைகளுக்கு மாற்றமாக சம்பள அதிகரிப்பு வழங்கும் போதும் அதற்காக விஷேட அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறையை தயாரித்து அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கும் படியும் ஆலோசனை வழங்கியிருந்த போதிலும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(x) முற்பணங்களைத் தீர்த்தல் தொடர்பாக அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கும் படி அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அவ் அறிவுறுத்தலுக்கமைய 2016 அக்தோபர் மாதம் வரை அமுல் நடத்தியிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கட்டுப்பாடு | (i) | வங்கி இணக்கக் கூற்றுக்களில் இணக்கமின்மைகள் காணப்படல் மற்றும் வங்கி இணக்கக் கூற்று தயாரிப்பதில் தாமதம் காணப்பட்டமை. |
| | | (ii) | வரையறையை மிகைத்து வங்கி மேலதிகப் பற்று வசதிகள் பெற்றிருந்தமையால் மேலதிகப் பற்று வட்டி கணிசமான அளவு செலுத்த நேரிட்டிருந்தமை. |
| (ஆ) | வருமான நிருவாகம் | - | வருமானம் சேகரித்தல் பலவீனமான நிலைமையில் காணப்படல் மற்றும் நிலுவையாகவுள்ள வருமானங்களை அறவீடு செய்வதற்கு பல வருட காலம் நடவடிக்கை எடுக்காமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பதவியணியின் நிருவாகம் | - | ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு அனுமதி பெறத் தவறியமை. முகாமைத்துவச் சேவை திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி சம்பள அதிகரிப்பு மற்றும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டமை. மனித வள முகாமைத்துவப் பணிப்பாளரின் முறையற்ற நியமனம். ஊழியர் மிகை ஒன்று காணப்படல். |
| (ஈ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | - | நிலையான சொத்துக்கள் பதிவேடு பராமரிக்கப்படாமை மற்றும் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யத் தவறியமை. |
| (உ) | வாகனக் கட்டுப்பாடு | - | வாகன விபத்துக்களுக்கான பழுதுபார்த்தல் முறையாக இடம்பெறாமை மற்றும் பழுதுபார்த்தல் செலவுகள் அதிகமாகக் காணப்பட்டமை. |
| (ஊ) | உள்ளகக் கணக்காய்வு | - | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் சேர்க்கப்படாமை காரணமாக போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று நடைபெறாமை மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறை அறிமுகப்படுத்த தவறியிருந்தமை. |